சுருக்கம்

செய்தி மக்கள் தொடர்புத் துறை – விழாக்கள் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 09.02.2021 அன்று அறிவித்த அறிவிப்பு –திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் பிறந்த நாளான ஆகஸ்டு 25-ஆம் நாள் அன்று வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், காங்கேயநல்லூரில் ஆண்டுதோறும் அரசு விழாவாக கொண்டாடிட அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (பொருட்காட்சி-விழா)த் துறை

அரசு ஆணை (நிலை) எண். 39 நாள்: 26.02.2021
திருவள்ளுவராண்டு 2052
சார்வரி, மாசி 14-ஆம் நாள்

படிக்கப்பட்டது:-

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு, நாள் 09.02.2021
2. செய்தி வெளியீடு எண்.105, நாள்.10.02.2021.

-----

ஆணை: -

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 09.02.2021 அன்று வேலூர் அண்ணா கலையரங்கத்தில் கீழ்க்கண்ட அறிவிப்பை அறிவித்தார்கள்:-

“தமிழ் கூறும் நல்லுலகம் அனைத்திலும் சைவத்தையும், தமிழையும், தேவாரம், திருவாசகம் போன்ற பக்தி பன்னூல்களையும் சுவைபட பொதுமக்களுக்கு சொற்பொழிவாற்றி, அனைத்து மதத்தினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சமூக நல்லிணக்கத்தை வளர்த்த பெருமைக்குரியவர் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள். இவர் 1906-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25-ஆம் நாள் வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், காங்கேயநல்லூரில் பிறந்தார். இவர் 19-ஆம் வயது முதல் சமய, சமூக சொற்பொழிவுகளை ஆற்ற தொடங்கி, அதன் மூலம் கிடைத்த வருவாயினை ஏழை, எளிய மக்களுக்கு கல்வி, மருத்துவம் மற்றும் திருமணம் ஆகிய மக்கள் நலம் சார்ந்த பணிகளுக்காக செலவிட்டார். இரண்டு புகழ் பெற்ற பல்கலைக் கழகங்களால் முனைவர் பட்டமும், இசைப் பேரறிஞர் பட்டமும், இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக, இந்திய அரசால், இவருக்கு அஞ்சல் தலை வெளியிடப்பட்ட சிறப்புக்குரியவர். நமது புரட்சித் தலைவருக்கு “பொன்மன செம்மல்" என்ற பட்டத்தை வழங்கி சிறப்பித்தவர்

கிருபானந்தவாரியார் அவர்கள். அவரது நினைவாக அவர் பிறந்த ஆகஸ்ட் மாதம் 25-ஆம் நாளை அரசு விழாவாக கொண்டாடப்படும்."

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பினை செயற்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் பிறந்த நாளை ஆகஸ்ட் 25-ஆம் நாள் அன்று வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், காங்கேயநல்லூரில் நிறுவப்பட்டுள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு ஆண்டுதோறும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் அரசு விழாவாக கொண்டாடலாம் என இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை அவர்கள் அரசைக் கோரியுள்ளார்.

3. அரசின் கவனமான பரிசீலினைக்குப் பின்னர், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை அவர்களின் கருத்துருவை ஏற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் பிறந்த நாளான ஆகஸ்ட் 25-ஆம் நாள் அன்று வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், காங்கேயநல்லூரில் நிறுவப்பட்டுள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு ஆண்டுதோறும் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தும் அரசு விழாவாக நடத்த அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்

<u>பெறுநர்</u>:-

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.
மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் மாவட்டம்.
இணை இயக்குநர் (நினைவகங்கள்), தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை-9.
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், வேலூர் மாவட்டம்.
சம்பள கணக்கு அலுவலர்.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-9/18.

<u>நகல்</u>:-

நிதி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி/வ.செ.பொ.II.வ.வ.-I)த்துறை, சென்னை-9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை (கணக்கு/வரவு- செலவு)த்துறை, சென்னை-9.
இ.கோ/உதிரி படிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்